1993 ஏப்ரல் 21

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெக்டேர் ஒன்றுக்கு இறால் வளர்ப்பதற்காக ரூபாய் 30,000 மானியமாக வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த இறால்களை எல்லாம் இந்தக் கடலோர பகுதியில் வளர்த்து வெளிநாடுகளுக்கு ஏற்று மதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதே இறால் வளர்ப்பை கடல் இல்லாத மற்ற பகுதிகளிலும் வளர்த்தால் அதற்கு மானியம் வழங்கப்படுமா? அப்படி கடல் இல்லாத பகுதிகளில் இறால் வளர்க்கிற தொழிலுக்கு ஊக்கம் அளிக்கப்படுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரைப் பகுதிகளிலே இறால் வளர்ப் பதற்கு அதிகமான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆனால் உள்நாட்டு நீர்நிலைகளைப் பொறுத்தமட்டில் 'மதர் புரூடன்' என்று சொல்கிற தாய் இறால் அதிகமான அளவுக்குக் கிடைப் பதில்லை. அதைக் கருத்தில்கொண்டுதான் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உள்நாட்டு நீர்நிலைகளில் ரோசன்பர்கி என்று சொல்லக்கூடிய அந்த இறால் வகைகளை வளர்ப்பதற்கான முறையை, அந்த வகை இறால் குஞ்சுகளை வளர்ப்பதை ஊக்குவிப்பதற்காக, ஒருவரே முன்வந்து அந்த பொரிப்பகம் ஆரம்பித்தால் கூட ரூபாய் 2.5 இலட்சம் மானியமாக வழங்குவதற்கு உத்திரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே முதல்கட்டமாக பொரிப்பகம் அமைக் கப்பட்டு அதன்மூலம் இறால் குஞ்சுகள் தங்குதடையில்லாத வகை யிலே கிடைக்கப் பெற்றால் படிப்படியாக உள்நாட்டு நீர்நிலைகளில் ரோசன்பர்கி என்ற வகை இறால் குஞ்சுகள் வளர்ப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதன் அடிப்படையிலே இந்தத் திட்டத்தின் வளர்ச்சியைக் கண்டு, மானியம் வழங்குவதற்கும் இனி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா 420, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

420—

எலச்சிப்பாளையம் காந்தி ஆசிரமத்திற்கு கைத்தறி விற்பனை யில் வழங்கப்படும் ரிபேட் தொகை.

* 10334—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

[1993 ஏப்ரல் 21

சங்ககிரி தொகுதி, எலச்சிப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள காந்தி ஆசிரமத்திற்கு தமிழ்நாடு கைத்தறி விற்பனையில் சிறப்பு ரிபேட் தொகையை மத்திய அரசுபோல் மாநில அரசும் குறிபிட்ட காலத்திற்குள் பரிசீலித்து தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை அவை முன் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

இக்கேள்வியில் கைத்தறி விற்பனையில் சிறப்பு தள்ளுபடி வழங்குவதுபோல கதர் உற்பத்தி செய்யும் காந்தி ஆசிரமத்திற்கு குறிப்பிட்ட காலத்திற்குள் சிறப்பு தள்ளுபடி வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதாகும். இங்கே குறிப்பிட்டுள்ள சிறப்பு தள்ளுபடி, திருச்செங்கோடு, காந்தி ஆசிரத்திற்கு கதர் துணி விற்பனை மீது மாநில அரசு வழங்கும் சிறப்பு தள்ளுபடி பற்றியது ஆகும். 1990-91ம் ஆண்டு முதல் இந்த சிறப்பு தள்ளுபடி மானியக் கோரிக்கைகள் அரசு வணிகத்திட்ட தணிக்கை துறையினரால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. காந்தி ஆசிரமத்திற்கு 1990-91-ம் ஆண்டுக்கான தள்ளுபடி மானியத் தொகை ரூபாய் 5,27,355.90 ஐ அனுமதித்து 16—12—1992 நாளிட்ட அரசு அணை (நிலை) எண். 326ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத் தொழில் துணைக்கூடம் மூலம் 1,39,000 பேருக்கு ஒரே வருடத்தில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் கிராமமக்கள் அனைவரும் தொழில் துறையில் முன்னேற்றவேண்டுமென்ற உயர் நோக்கோடு செயல்பட்டுவரும் இந்தப் புனித ஆட்சியில் எலச்சிபாளையம் ஒன்றியம் காந்தி கிராமத்தில் அமைந்திருக்கும் அந்த காந்தி ஆசிரமத்தில் என் தொகுதியில் ஓர் ஒன்றியம் முழுவதும் உள்ள கிராம மக்கள் பயன்பெறும் வகையில் அந்த தொழில் கூடம் அமைந்துள்ளது. அங்கே பணிபுரியும் தொழிலாளர்களுடைய நலனைக் கருதி ரிப்பேட் தொகை ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலத்திற்கு வழங்க அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் அரசு வணிகத் திட்டத்துறையின் மூலம் தணிக்கை செய்யப்பட்டு வாரியத்தில் பெறப்பட்ட அரசின் ஆணைக்காக அரசு உரிய எடுத்துரை அனுப்புகிறது. இது அலுவலக ரீதியாக ஏற்படும் நடைமுறையே தவிர வேறு எந்த கால்

தாமதமும் ஏற்படுவதில்லை. திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திற்கு 1989–90 வரை தள்ளுபடி மானியங்கள் வழங்கப்பட்டு விட்டன. இந்த ஆண்டு 1990-91 ஆம் ஆண்டுக்கான தள்ளுபடி மானியம் 16-12-1992 நாளிட்ட அரசு ஆணையின்படி வழங்கப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கவேண்டிய மானியத் தொகை வழங்கப்பட்டு விட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத தெரிவித்துக்கொண்டு, ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்திலேயே அது வழங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் அரசு தணிக்கைத் துறையின் மூலம் தணிக்கை செய்யப்பட்டு ,அதன் மூலம் தணிக்கை அறிக்கைகள் வாரியத்திற்குக் கிடைக்கப்பெற்று, அரசு ஆணைக்காக மீண்டும் உரிய முறையில் எடுத்துரைக்க அனுப்பப்படுகிறது. இது அரசு அலுவலக ரீதியாக ஏற்படும் நிலையே தவிர இதிலே காலதாமதம் ஏற்படுவது இல்லை. எனவே, இந்த ரிபேட்தொகையைப் பொறுத்தவரையில் அரசின் நடைமுறைகள் முடிக்கப்பட்டு உடனுக்குடன் இந்த ரிபேட் தொகைகள் வழங்கப்படுகிறது என்பதைத் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

403—

சிவகங்கையிலுள்ள இராமநாதபுரம் மாவட்ட நூலகம்

* 15681– டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:–

(அ) இராமநாதபுரம் மாவட்ட நூலகம் சிவகங்கையில் இருந்து மாற்றப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?